பதிவு எண்: M 6311 ★ தொலைபேசி: 31331 சிறப்பிதழ்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: மாசி 25 (8–3–68) வெள்ளி ★ வெளியூர்: மாசி 26 (9–3–68) சனி [இதழ்: 222

சென்னைத் தீ விபத்து

பாதிக்கப்பட்டோருக்கு அமைச்சர் ஆறுதல்

கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இன்று காலை 8-30 மணியளவில், சிந்தாதிரிப்பேட்டை நேப்பியர் பூங்கா எதிரில் குடிசைகள் தீப்பற்றி எரிந்து போன இடங்களைப் பார்வையிட்டார்.

பாதிக்கப்பட்டமக்களுக்கு அமைச்சர் ஆறுதல் கூறியதோடு அவர்களுக்கு வேண்டிய உதவிகளை உடனே செய்யுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இப்போது பஞ்சாப்!

"சட்டமன்றத்தில் என்னுடைய இடத்தில் அமர்ந்து, அவைத் தலைவருக்குரிய அலுவல்களை நிறைவேற்ற இயலாது; அவை என்னுடைய சொத்தாகும்; அதை இப்போது பூட்டிவைக்கப் போகிறேன்."

"நான் வெளியேறிய பிறகும் அவையில் உட்கார்ந்திருப்பவர்களை, 'பார்வையாளர்கள்' என்றுதான் சொல்லமுடியும்; இந்த மன்றத்துக்குள் குறுக்கிடுபவர்கள், 'அத்துமீறி நுழைபவர்கள்' ஆவர்—'தண்டனைக்கு உரியவர்கள்' ஆவர்"

என்று கூறியிருக்கும் பஞ்சாப் மாநிலச் சட்டமன்றத் தலைவர் ஜோகிந்தர் சிங் மன், இன்னும் சில நாட்களுக்குச் செய்தித் தலைப்புக்களில் வரும் மனிதராக இருக்கப் போகிருர்!

நேற்று அவரால் ஒத்திவைக்கப்பட்டிருக்கும் பஞ்சாப் சட்டமன்றம், மேற்கு வங்காளத்துக்குப் பின் மீண்டும் ஒருமுறை அரசியல் சட்ட நுணுக்கப் பிரச்சினைகளுக்கு வித்திட்டிருக்கிறது!

Adjournment; Sine-Die; Prorogation—என்பன போன்ற சட்டமன்ற நடவடிக்கைகள் பற்றிய ஆங்கில வார்த்தைகள், இப்போது, 'கைநாட்டுப் பேர்வழி'களுக்குக்கூட அத்துபடியாகிவிட்டிருக்கும் அளவுக்கு அரசியல் சட்டப் பிரச்சினைகள், அறுவை சிகிச்சைக்கு உள்ளாகியுள்ளன!

தற்போதைய பஞ்சாப் சட்டமன்றத் தலைவர், முன்னர் கூட்டணி ஆட்சி இருந்தபோது தேர்ந்தெடுக்கப்பட்டவர்!

கூட்டணி ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு, சிறுபான்மைக் கட்சியான ஜனதா கட்சியை ஆட்சியில் அமர்த்தி, காங்கிரசுக் கட்சி அதற்குப் பக்கபலமாக இருந்துவருகிறது!

சட்டமன்றத் தலைவர் மட்டும், பழைய கூட்டணிக் கட்சியைச் சார்ந்தவராகவே இருந்துவருவதால், அவை நடவடிக்கைகளில் ஒருதலைப்பட்சம் காட்டப்படுவதாக எழுந்த கருத்து வேறுபாடு, நேற்றையத் தினம் அவர்மீது இரண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானங்களைக் கொண்டுவரும் அளவுக்கு வளர்ந்தது!

நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்குரிய 14 நாள் தவணை கொடுக்காததால், கூட்டணித் தலைவர்கள் அதனை எதிர்த்தனர்!

இதனால் எழுந்த சல சலப்பினால், அவைத் தலைவர், அரை மணி நேரத்திற்கு மன்றத்தின் நடவடிக்கைகளை ஒத்திவைத்தார்!

சட்டமன்றம் கூடியபோது மீண்டும் வந்து அமர்ந்த தலைவர், 'அரசியல் சட்ட விதி 179 (c) பிரிவின்படி இப்போது என்மீது கொண்டுவந்திருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் புறம்பானதாகும்; சட்டமன்றத்தில் காணப்படும் கொதிப்பு நிலை—ரௌடித்தனம் ஆகியவை காரணமாக, அவையை இரண்டு மாத காலத்துக்கு ஒத்திவைக்கிறேன்' என்று அறிவித்துவிட்டு வெளியேறினார்!

ஆளும் கட்சியும்—அதற்குப் பக்கபலமாக இருக்கும் காங்கிரசும் அதிர்ச்சியிலிருந்து மீளுவதற்கு முன்னால் சட்டமன்றத் தலைவரின் ஆசனம், கேலிக்குரியதாக்கப்பட்டிருக்கிறது!

அதற்குள்ளாக ஒருவர், காலியாக இருந்த முதலமைச்சர் இடத்திலேயே உட்கார்ந்து பார்த்திருக்கிறார்!

இந்த அவலங்களுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல்தான் சட்டமன்றத் தலைவர், ஆரம்பத்தில் கூறிய அறிக்கையினைப் பத்திரிகைகளுக்குத் தந்திருக்கிறார்!

இப்போது இதனால் எழும் பிரச்சினைகள் இவைதான் :—

★ சட்டமன்றத் தலைவர், காலவரையறையின்றி—காரணம் காட்டாமல் இதுபோல் சட்டமன்றத்தினை ஒத்திவைத்துக் கொண்டே போகமுடியாது!

★ 'இரண்டு மாதம்' என்று இப்போதைக்கு சபையைக் கால வரையறையுடன் ஒத்திவைத்திருப்பதால், கவர்னர் எந்த வகையிலும் தலையிட முடியாது!

★ சட்டமன்றத்தினை, தலைவர், 'சைனி டை' செய்திருந்தால் மட்டுமே கவர்னர், 'புரோராக் செய்துவிட்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்; ஆனால், இந்த நிலையில் அதற்கும் வழி இல்லை!

★ குடியரசுத் தலைவர் மூலம் சட்டமன்றத்தையே கலைத்துவிட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டுவருவது ஒன்றுதான் இருக்கும் ஒரே மருந்து; ஆனால் இதிலும், 'அரசியல்' கலப்பதால், புதுடில்லி சற்றுத் தயங்குவதாகத் தெரிகிறது! 'வங்காளம், பஞ்சாப், மத்தியப் பிரதேசம்—என்று இப்படிப் போய்க் கொண்டே இருந்தால்...?' என்ற அடிப்படையில் அவர்களும் சிந்திக்கவே செய்கிறார்கள்.

பெரும்பான்மைக் கட்சி ஆளும்போது தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத் தலைவர்கள் அந்தப் பெரும்பான்மைக் கட்சி அகற்றப்பட்டு — காங்கிரசின் தந்திரங்களினால் சிறுபான்மைக் கட்சி ஆட்சியில் அமரும்போதும், தொடர்ந்து தலைவர் பதவியில் நீடிப்பதால் எழும் தவிர்க்க முடியாத சிக்கல்கள் இவை!

தன்னைத் தேர்ந்தெடுத்த கட்சி பதவி விலகும்போது—விலக்கப்படும்போது, சட்டமன்றத் தலைவரும் பதவி விலகுவது ஒன்றுதான் இதற்கும் உள்ள நிரந்தரமான மருந்து; ஆனால், அதற்குத் தக்கவகையில் சட்டம் திருத்தப்பட வேண்டும்!

அதுவரையில் பஞ்சாபும் மீண்டும் ஒரு வங்காளம் ஆவதை எப்படித் தவிர்ப்பது என்பதுதான் இப்போதைய பிரச்சினையாக உருவாகியிருக்கிறது!

மற்றப் பகுதிகளுக்கும் படி அரிசி— விரைவில் செயல்படுத்த நடவடிக்கை

தமிழக அரசு முயற்சியால் விலைவாசிகள் இறங்குமுகம்

சர்க்கரை, பருப்புவகைகள் பற்றுக்குறையைச் சமாளிக்கத் தக்க ஏற்பாடுகள்—சட்டமன்றத்தில் அமைச்சர் மதியழகன் விளக்கம்

"விலைவாசிகளின் உயர்வைக் கட்டுப்படுத்தவும், உணவுப் பண்டங்கள் போதிய அளவில் தடையின்றிக் கிடைக்கச் செய்யவும் தமிழக அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக நிலைமையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

"1968-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சென்னை நகரில் பாட்டாளி மக்கள் வாழ்க்கைச் செலவின் குறியீட்டு எண் 10 புள்ளிகள் குறைந்து 705-ஆக வந்துள்ள செய்தி பேரவையின் உறுப்பினருக்குப் பெருமகிழ்ச்சி தரும். உணவுப் பொருள்களைப் பொறுத்த குறியீடு 20 புள்ளிகள் குறைந்து 771-ஆக வந்தது. பருப்பு, காய்கறிகள், மிளகாய், புளி, தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் ஆகியவற்றின் விலை இறங்கியதே இந்தக் குறியீடு குறைந்ததற்குக் காரணம்.

"உணவு முனையில் அரசாங்கம் பின்பற்றிவரும் துணிவான—தெளிவான கொள்கை பலனளிக்கத் தொடங்கியுள்ளது. இதன் பயனாக, சமீபகாலத்தில் முதன்முறையாக வாழ்க்கைச் செலவு ஒரு கட்டுப்பாட்டிற்கு உள்ளாகியுள்ளது.

"விலைவாசிகள் பிரச்சினைக்கு நிலையான—நீண்டகாலத் தீர்வு காண்பது, மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகளைப் பெரிதும் பொறுத்ததாகும்.

"ஆயினும், இப்பேரவையின் ஒத்துழைப்புடனும் பொதுமக்களின் பண்பு கலந்த ஆதரவுடனும் 'விலைவாசிகள் ஏற்றம்' என்ற சிக்கலான சோதனைமிக்க பிரச்சினையில், நம் நடவடிக்கைக்கு உட்பட்ட குறுகிய அளவில் வெற்றிகாண முடியும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

"அரசாங்கத்தின் ஆக்க நடவடிக்கைகளின் பயனாகப் பொருளாதார நிலைமை சீராகி—வளமும் செழிப்பும் கொழித்து—இந்த வளர்ச்சியிலும் வாழ்விலும், சமூகத்திலே பல்வேறு பிரிவினரும், பல மட்டங்களில் உள்ளவரும் பங்கு பெற்றுப் பலனடையும் சமதர்ம நிலை சடுதியிலே உருவாகும் என்ற இலட்சிய நம்பிக்கை எனக்கு உண்டு"

என்று உணவு அமைச்சர் திரு. கே.ஏ. மதியழகன் அவர்கள் இன்று சட்டமன்றத்தில் தெரிவித்தார். உணவு வழங்குத் துறையின் நடவடிக்கைகள் பற்றிய கொள்கைக் குறிப்புரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது :—

ரூபாய்க்குப் படி அரிசித் திட்டத்தினால் மட்டும் அரசாங்கத்திற்கு ஏற்படும் மானியச் செலவு 1967—68-ம் ஆண்டில் ரூ. 2.56 கோடி ஆகும். இத்திட்டத்தினால், 42.80 இலட்சம்பேர் பலனடைகின்றனர்.

எஞ்சிய ரூ. 2.5 கோடி சட்டபூர்வ பங்கீடும், சட்டபூர்வமல்லாத பங்கீடும் அமுலில் உள்ள பகுதிகளில் கொள்வினை செய்வோர் அனைவருக்கும் அளிக்கப்படும் சலுகைகளாலும், உற்பத்தியாளருக்குத் தரப்படும் போனசாலும், ஏற்படும் செலவாகும். இந்த ரூ. 2.5 கோடி மானியச் செலவினால் சட்டபூர்வமல்லாத பங்கீட்டு முறை அமுலில் உள்ள பகுதிகளில் 126 இலட்சம்பேரும்கூட நன்மை அடைகின்றனர்.

ஆகவே, அரசாங்கம் மானியமாகச் செலவு செய்யும் தொகைகளால் நன்மை பெறுபவர்கள், ரூபாய்க்கு படி அரிசித் திட்டத்தின்கீழ் சட்டபூர்வ பங்கீட்டுப் பகுதிகளில் உள்ளவர்கள் மட்டுமல்லர்; இந்த நன்மை, பரவலாக சட்டபூர்வமற்ற பங்கீட்டு முறை அமுலில் உள்ள பகுதிகளில் உள்ள 126 இலட்சம் பேருக்கும் ஓரளவு கிடைக்கின்றது என்ற உண்மை தெளிவாகும்.

ரூபாய்க்குப் படி அரிசித் திட்டத்தை மற்றப் பகுதிகளிலும் விரிவுபடுத்த வேண்டும் என்ற கோரிக்கையை பல உறுப்பினர்களும் எழுப்பியுள்ளனர். சென்னையிலும், கோவையிலும் சட்டபூர்வ பங்கீட்டு முறை 1965 முதற்கொண்டு அமுலில் இருந்தது; ஆகவேதான், ரூபாய்க்குப் படி அரிசித் திட்டத்தை முதலில் அமுல் செய்ய இவ்விரு பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

சென்னையிலும், கோவையிலும் சட்டபூர்வ பங்கீட்டு முறை அமுல் செய்வது என்பது மத்திய அரசின் பரிந்துரையின் பேரிலே முந்திய அரசாங்கம் எடுத்த முடிவு. இவ்விரு பகுதிகளிலும் பாட்டாளி மக்கள் பல இலட்சக் கணக்கான பேர் இருப்பதாலும், அவர்களுக்கு நயமான விலையில் போதிய அரிசி கிடைக்கச் செய்வது அரசின் கடமை என்று கருதப்பட்டதாலும், இப்பகுதிகளில் சட்டபூர்வ பங்கீட்டு முறை முதலில் அமுல் செய்யப்பட்டது.

ஆகவே, ரூபாய்க்குப் படி அரிசித் திட்டத்தை சென்னையிலும், கோவையிலும் முதலில் அமுல் செய்ததில் இப்பகுதிகளுக்கு அரசாங்கம் தனிச் சலுகை காட்டிப் பாரபட்சமாக நடந்துகொண்டது என்ற புகாருக்கு இடமில்லை.

ரூபாய்க்குப் படி அரிசித் திட்டத்தை மற்றப் பகுதிகளுக்கு விரிவுபடுத்துவதால் அரசாங்கத்திற்கு அதிக செலவாகும் என்பதை உணர்ந்திருந்தபோதிலும், எத்தனைப் புதிய பகுதிகளுக்கு இதை விரிவுபடுத்த முடியுமோ அத்தனைப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்த அரசாங்கம் உண்மையில் ஆர்வத்துடன் இருக்கிறது.

நாம் விரும்புவதைப்போல் மற்ற பகுதிகளிலும் இத்திட்டத்தை இப்பொழுதே விரிவுபடுத்த முடியவில்லையென்றால், அதற்கு முக்கிய காரணம் நம் கைவசம் போதிய அளவு தானிய சேமிப்பு இல்லை என்பதுதான்.

நான் முன்பு கூறியதைப்போல், இப்போதுள்ள தேவைகளை

(4-ம் பக்கம் பார்க்க)

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

திருவள்ளுவராண்டு 1999 மாசி 25 (8—3—68) வெள்ளி

கைத்தறி நெசவின் எதிர்காலம்

கைத்தறித் தொழிலை ஆதரிப்பது அல்லது பாதுகாத்து வளர்த்து வருவது என்பது, பல இலட்சக்கணக்கில் இருந்துவருகின்ற நெசவாளர்களுக்கும், அவர்களுடைய குடும்பங்களுக்கும் 'உயிர்த் தண்ணீர்' வழங்கி வருவது என்ற இலட்சியத்தையே அடிப்படையாகக் கொண்டதாகும். இந்த இயந்திர யுகத்தில், கைத்தறித் தொழிலைப் பாதுகாத்து வளர்த்து வருவதற்குப் பெருமுயற்சி தேவைப்படுகிறது.

கைத்தறி நெசவாளர்களின் கைத்திறத்தையும், உற்பத்தித் திறனையும், செய்நேர்த்தியையும் குறைத்து மதிப்பிடுவது உண்மைக்குப் புறம்பானதாகும். 'விரும்பி வாங்குவதற்குரிய வகையில் கவர்ச்சிமிக்க ஆடைகளைக் கைத்தறிகள் உற்பத்தி செய்வதில்லை' என்ற குற்றச்சாட்டு, சில ஆண்டுகளுக்கு முன்புவரை பொருந்தக் கூடியதாக இருந்திருக்கலாம்; இன்று அக்குற்றச்சாட்டைக் கைத்தறிகள்மீது சுமத்துவது துளியும் பொருந்தாது.

நவீன இயந்திரங்களைக் கொண்ட நெசவாலைகள், விசைத்தறிகள் ஆகிய இரண்டு துறைகளிலுமிருந்தும் கிளம்பி வளர்ந்துவருகின்ற போட்டி, கைத்தறித் தொழிலுக்கு உயிர்க்கொல்லியாக அமைந்திருக்கிறது. அவ்விரண்டு துறையிலுமிருந்து உருவாகி வரும் தாக்குதல், கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கையை மெல்ல மெல்ல ஆனால் வலிவாகச் சிதைத்து கொண்டு வருகிறது. வலிவுமிக்க இப்பயங்கரமான தாக்குதலைத் தாங்கிக்கொள்ள இயலாமல் கைத்தறி நெசவாளர்கள், நாளுக்கு நாள் வாழ்க்கைத்தரம் குறைந்தும், வாழும்வகை இழந்தும், எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையற்றும் நடைபிணங்களாகக் கவலையில் மூழ்கிக் கிடக்கின்றனர்.

இந்த அவலநிலையில் கைத்தறி நெசவாளர்கள் என்றோ தள்ளப்பட்டுவிட்டனர். இதிலிருந்து அவர்களைக் கரையேற்றிக் காப்பாற்றும் கருத்துடன், ஏற்கனவே மாநில ஆட்சியில் இடம்பெற்றிருந்த காங்கிரசு அரசு, இந்திய அரசின் ஒத்துழைப்பைப் பெற்றுச் சில உதவிகளைச் செய்துவந்தது. அதுபோன்றே, இன்றையத் தமிழக அரசும் 1967—68.ம் ஆண்டில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாயைச் செலவிட்டு, கைத்தறி நெசவுத் தொழிலைப் பாதுகாத்து—நெசவாளர்களின் துன்பத்தைக் குறைத்திடும் முயற்சியை மேற்கொண்டிருக்கிறது.

தமிழக ஆட்சிப் பொறுப்பில் இடம் பெறுமல், வெறும் அரசியல் எதிர்க் கட்சியாக மட்டுமே கழகம் இருந்துவந்த நேரத்திலேயே கைத்தறி நெசவாளர்களின் துயர் துடைக்க, தேங்கிக்கிடந்த கைத்தறித் துணிகளைத் தலையில் சுமந்து தெருத் தெருவாக விலை கூவி விற்றிருக்கிறது. கழகம் இந்த நற்பணியைச் செய்ததன் வாயிலாக 'கைத்தறித் துணியையே கட்டவேண்டும்' என்ற குறிக்கோளை, தமிழக மக்களில் பல இலட்சக்கணக்கான மக்களின் உள்ளங்களில் விதைத்தது. அவ்வாறு கழகம் அப்பொழுது விதைத்தது வீண் போகவில்லை. கைத்தறி ஆடையின் கவர்ச்சியையும் வண்ணத்தையும் மட்டுமே கண்டுவந்த மக்கள், அந்தக் கவர்ச்சிக்கும் வண்ணத்துக்கும் ஊடே உழைத்து உழைத்து உருக்குலைந்து கிடக்கின்ற கைத்தறி நெசவாளியையும், அவன் கண்களிலிருந்து சிந்திக்கொண்டிருக்கும் கண்ணீரையும் காணலாயினர்; இதன் விளைவாக, கைத்தறி ஆடைகளுக்கு உரிய ஆதரவை தந்துவர மக்கள் முன்வந்தனர்.

இருந்தாலும், நெசவாலை—விசைத்தறி ஆகிய இரண்டின் பயங்கரமான தாக்குதலைத் தாங்கிக்கொள்ளும் ஆற்றலைக் கைத்தறித் துறையால் பெற முடியவில்லை. இந்த நிலையில், பல ரக செயற்கை நூற்களால் உருவாக்கப்பட்ட விதவிதமான ஆடைகள் அங்காடிகளில் குவியலாயின; அவைகள், மக்களின் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கலாயின; 'கைத்தறித் துணிகளையே ஆதரித்து வரவேண்டும்' என்ற உறுதிப்பாட்டுக்கும்—புதுரக ஆடைகளின் கவர்ச்சி மூட்டிடக்கூடிய ஆசைக்கும் இடையில் மக்கள் ஊசலாடலாயினர்,

ஒவ்வொரு ஆண்டும் கைத்தறிப் பொருட்காட்சி நடைபெற்றுவந்தது போலவே இந்த ஆண்டும் கைத்தறிப் பொருட்காட்சி தமிழகமெங்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சென்னையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற கண்காட்சி, தமிழக மேலவைத் தலைவர் மாணிக்கவேலர் அவர்கள் தலைமையில் துவக்கப்பட்டது.

அத்தருணத்தில், கைத்தறித் தொழில் வாழ, ஏற்கனவே ஆச்சாரியார் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில், தமிழகச் சட்டப் பேரவை நிறைவேற்றிய தீர்மானத்தை நினைவுபடுத்தி, அதைச் செயலாற்ற வேண்டும் என வலியுறுத்தி இருக்கின்றார்.

"'கரை போட்ட வேட்டிகள், வண்ணப் புடவைகள் உற்பத்தி கைத்தறித் துறைக்கே ஒதுக்கப்பட வேண்டும் என்று 1952-ல் தமிழக அரசு நிறைவேற்றிய தீர்மானம் செயல் ரீதியில் நிறைவேற்றப்பட வேண்டும்"

என்றும்;

"அதிக விலையுள்ள இறக்குமதி நூல்களைக் கைத்தறித் துறை வாங்கவேண்டிய சுமை நீங்கும் வகையில் 40-ம் நெம்பர் நூலுக்கும் குறைவான இந்திய நூல்கள் போதிய அளவில் கைத்தறித் துறைக்குக் கிடைக்குமபடி மத்திய அரசு செய்ய வேண்டும் எனக் கூறும் அத்தீர்மானத்தின் இன்னொரு பகுதியும் நிறைவேற்றப்பட வேண்டும்"

என்றும் மாணிக்கவேலர் அறிவித்துள்ளார். இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதில், அந்த நேரத்தில் அமைச்சராக இருந்த மாணிக்கவேலருக்கும் பங்கு உண்டு.

1952-ல் ஆச்சாரியார் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட தமிழகக் காங்கிரசு அரசு நிறைவேற்றிய இத்தீர்மானத்தைச் செயலாற்றும்படி நமது கழகம், தொடர்ந்தாற்போல் இந்திய அரசைக் கோரி வந்திருக்கிறது. ஆனால் இந்திய அரசோ, இன்றுவரை கேளாக் காது கொண்டதாகவே இருந்துவருகிறது.

1952-ல் தமிழக அரசு நிறைவேற்றியுள்ள தீர்மானத்தைச் சுட்டிக்காட்டி, அதை நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கையை மாணிக்கவேலர் அவர்கள் வெளியிட்டிருப்பது போன்றே, இப்பதினொன்காவது கைத்தறிப் பொருட்காட்சியை ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த விஜயவாடா நகரத்தில் துவக்கிவைத்த ஆந்திர மாநில நீர்ப்பாசன அமைச்சர் சீலம் சித்தைய ரெட்டியார் அவர்களும், வேட்டியையும் வண்ணப் புடவையையும் உற்பத்தி செய்வதைக் கைத்தறிக்கு மட்டுமே ஒதுக்க இந்திய அரசு தவறிவிட்டதை இடித்துரைத்துள்ளார்.

இவ்வாறு சுட்டிக்காட்டியதுடன் ஆந்திர அமைச்சர் மனநிறைவு பெற்றுவிடவில்லை.

"நெசவாலைகளிலும் விசைத் தறிகளிலும் உற்பத்திச் செய்யப்பட்ட புடவைகளும் வேட்டிகளும் இறக்குமதி செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்த ஆந்திர மாநில அரசு தேவைப்படும் நடவடிக்கையைமேற்கொள்ளும்."

ஆந்திர மாநிலப் பாசன அமைச்சரான சீலம் சித்தைய ரெட்டியார் அவர்கள், மேற்குறித்துள்ள முடிவைக் கூறியிருப்பதன் விளைவைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும், இம்முடிவில்தான் கைத்தறி நெசவாளர்களின் எதிர்காலம் அமைந்திருக்கிறது என்ற உண்மையை மறப்பதற்கில்லை.

—கா. க.

அரிசியில் கலப்படம் செய்வோருக்குக் கடுந்தண்டனை!

சட்டத்தைக் கடுமையாகச் செயல்படுத்த அரசு முடிவு

சென்னை, மார்ச் 6—

"அரிசியில் கலப்படம் செய்வோருக்குக் குறைந்தது ஓராண்டுக் கடுங்காவல் தண்டனையாவது விதிக்கும் வகையில் சட்டம் கொண்டுவரப்படுமா?"

என்று சட்டமன்றத்தில், சமூக உறுப்பினர் திருப்பூர் துரைசாமி கேட்டார்.

"இப்பொழுதுள்ள சட்டத்தையே கடுமையாகச் செயல்படுத்தினால் உணவுக் கலப்படத்தை ஒழித்து வெற்றிபெற முடியும் என்று இந்த அரசு நம்புகிறது"

என்று, அமைச்சர் கே. ஏ. மதியழகன் பதிலளித்தார்.

தமிழ்நாட்டில் மற்றொரு அணு மின்விசை நிலையம்?

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, மார்ச் 6—

"தமிழகத்தில் ரூ. 100-கோடி செலவில் 200 மெகவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய அணு விசை நிலையத்தை கல்பாக்கத்தில் நிறுவும் முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன; இப்பொழுதுள்ள நிலையில், ஒரு மாநிலத்துக்கு ஓர் அணு மின் விசை நிலையம்தான் ஏற்படுத்த முடியும்; எனவே, மணவாளக் குறிச்சியில் கிடைக்கும் அணுசக்தி மூலப்பொருள்களை, கல்பாக்கம் அணு மின்சார நிலையத்திற்கே பயன்படுத்திக்கொள்ளலாம்.

"தமிழ்நாட்டில் மற்றொரு அணு மின்விசை நிலையம் ஏற்படுத்தலாம் என்கிற கட்டம் வரும்போது, அதனைத் தூத்துக்குடியில் நிறுவலாம் என்று யோசனை கூறப்பட்டுள்ளது. அதைத் தூத்துக்குடியில்தான் நிறுவ வேண்டுமோ கன்னியாகுமரியில் நிறுவலாமா என்பதை பின்னர் யோசித்து முடிவு செய்யலாம்"

என்று, தொழிலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், சட்டமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

உழவுத் துறையினருக்கு அண்ணா உறுதிமொழி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கிற சில திட்டங்களும், அண்டை மாநிலங்களின் இசைவைப் பொறுத்திருக்கின்றன; இவ்விசைவைப் பெறுவதற்கான காலமும் நீண்டு கொண்டே செல்கிறது.

எனவே, பாலாற்றுப் பரப்பு—நெய்வேலிப் பகுதி—காவிரிக் கழிமுகம்—சென்னை நகரைச் சூழ்ந்த பகுதிகள் போன்ற குறிப்பிட்ட பகுதிகளில், நில அடிமட்ட நீர் வளங்களை ஆய்வு செய்து முற்றிலும் பயன்படுத்துவதில் தனது முயற்சிகளைத் திருப்ப வேண்டுமென்று சிறிது காலமாகவே அரசு உணர்ந்துள்ளது.

இத்திட்டப் பகுதிகளை, அயல்நாட்டுக் குழு ஒன்றின் துணை கொண்டு, விமானமூலம் ஆய்வு செய்வதற்காக, அரசு, அண்மையில் ரூ 4 5 இலட்சம் அளவிற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ஐ. நா. வளர்ச்சித் திட்டக் குழு இந்த ஆய்விற்கு ஏற்பாடு செய்துவருகிறது.

இந்திய ஜெர்மனி திட்டம்

மூன்றும் திட்டக் காலத்தில், உணவு முனையில் கிடைத்த நமது அனுபவம் காரணமாக, உணவுத் தானிய உற்பத்திப் பெருக்கத்தில் நமது நாட்டத்தைப் பெரிதும் செலுத்த வேண்டியிருந்தாலும், உருளைக் கிழங்கு போன்ற துணைப் பயிர்களின் தேவையினை நாம் அடியோடு புறக்கணித்தல் கூடாது.

ஜெர்மானிய கூட்டாட்சிக் குடியரசின் துணைகொண்டு, 1967-ம் ஆண்டின் தொடக்கத்தில், நீலகிரி மாவட்டத்தில் முனைப்பு வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டதை இப்பேரவை அறியும். இத்திட்டத்திற்கு, 1968—69-ன் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 22.2 இலட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்திலுள்ள தேயிலைத் தோட்டங்களுக்கு, கூட்டுறவு நில அடமான வங்கிகளின் மூலம் கடனுதவி அளிப்பதற்கும் அரசு ஒரு திட்டம் வகுத்துள்ளது.

உதகமண்டலம், குன்னூர் வட்டங்களில் உள்ள கோத்தகிரி, குன்னூர், கீழ்க்கோத்தகிரி 'உள் வட்டங்கள்' அடங்கிய ஒரு தொகுப்பான பகுதியில் 2,000 ஏக்கர் பரப்பளவில் தேயிலை முனைப்பாகப் பயிரிடப்படும்.

ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 2500 வீதம் நில அடமான வங்கிகள் கடனுதவி வழங்கும்; இக்கடன், 6 ஆண்டுக்காலம் கழித்து 15 தவணைகளில் திருப்பிச் செலுத்தப்படல் வேண்டும். மொத்தத்தில் ரு 50 இலட்சம் செலவாகுமென்று மதிப்பிடப்படுகிற இத்திட்டத்திற்கு, சிறப்பு வளர்ச்சி ஈட்டுறுதி ஆவணங்கள் வாயிலாக நிதி எழுப்பப்படும்.

வேளாண்மை மறு கடன் உதவிக் கழகமும், மாநில அரசாங்கமும் 3:1 என்ற விகிதத்தில் இந்த ஆவணங்களில் முதலீடு செய்யும்.

மீனளம்

அடுத்த ஆண்டுத் திட்டத்தை வகுக்கையில், நமது உணவு வளங்களுடன் இணைந்து நிறைவு செய்யும் வகையில் மீனளங்களை மேலும் ஆர்வத்தோடு வளர்ப்பதற்கான வழிவகைகளையும் கருத்தில் கொண்டுள்ளோம்.

மீனளங்கள் குறித்த வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கம் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டிருந்த ரூ. 84.5 இலட்சத்திலிருந்து திருத்த மதிப்பீடுகளில் ரூ. 15.67 இலட்சத்திற்கு நடப்பு ஆண்டில் உயர்த்தப்பட்டுள்ளது.

இப்போது விசைப் பொறிகள் எளிதில் கிட்டுவதைக் கருதி அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 200 விசைப்படகுகள் கட்டுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மீன் படகுகளை, விசைப் படகுகளாக மாற்றுவதில் கடந்த சில ஆண்டுகளில் சிறந்த முன்னேற்றம் எய்திருப்பினும், ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கான வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள இதுகாறும் ஆர்வமுடன் எவ்வித முயற்சிகளிலும் ஈடுபடாமல் வாளாவிருந்தது, வருந்தத்தக்கதாகும்.

ரூ 36 இலட்சம் மொத்தச் செலவில், நான்கு மீன்பிடி நாவாய்களை வாங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அழகுக் நீண்டு செல்லும் கடற்கரை அமைந்த தமிழ்நாட்டில், ஆழ்கடல் மீன்வளத்தை வெகு நாட்களுக்கு முன்பே பயன்படுத்தத் தலைப்பட்டிருக்கவேண்டும்.

விலங்கின வளர்ப்பு

இவ்வண்ணமே, விலங்கின வளர்ப்பின் கீழும் தற்போதைய அளவில் செயல்கள் பேணிப் வரப்படும். விலங்கினங்களுக்கு மருத்துவ வசதிகளைப் பரவலாக ஏற்படுத்துவதில் அரசு மிக முக்கியத்துவம் அளிக்கின்றது. இதற்கேற்ப, வருகிற ஆண்டில் பற்பல கிராம நிலையங்களில், 50 கால்நடை மருந்தகங்களை நிறுவுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

இது தவிர, நமது கால்நடைச் செல்வத்தைப் பாதுகாக்கும் முயற்சியில், கோமாரி நோயினை அறவே ஒழிப்பது குறித்த புதிய வேலைத் திட்டத்துக்காகவும் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

திரைப்பட அரங்குகள் அரசுடைமையாகுமா?

அமைச்சர் மதியழகன் விளக்கம்

சென்னை, மார்ச் 7—

"திரைப்படக் காட்சி அரங்குகளைத் தேசீயமயமாக்கும் கொள்கைக்கு இந்த அரசு விரோதமானதல்ல; அதனைக்கொள்கையளவில் இந்த அரசு ஏற்றுக் கொண்டிருந்தபோதிலும், தற்போது வேறு பல காரியங்களிலும் ஈடுபட்டிருப்பதால், இந்தக் காரியத்தில் கவனம் செலுத்த முடியவில்லை"

என்று, வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே ஏ. மதியழகன், சட்டமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் விளக்கினர்.

உழவுத் துறையினருக்கு அண்ணா உறுதிமொழி

நிதி நெருக்கடி நிலையிலும் உதவித்தொகை குறையாது

பாசனம் -- கால்நடை -- தோட்டப் பயிர் -- மீன் வளம் ஆகியவை தொடர்பாகச் சிறப்புத் திட்டங்கள்

"பொதுக் கடன்களையும், இந்திய அரசுக்குச் செலுத்தவேண்டிய கடன்களையும் திருப்பிச் செலுத்தவேண்டிய பொறுப்பு கணிசமாக உயர்ந்திருப்பதனாலும், அகவிலைப் படி வீதங்களை உயர்த்தியதால் ஏற்படும் முழு விளைவினாலும், நடப்பு ஆண்டைவிட அடுத்த ஆண்டில் திட்டத்திற்கான நிதி வசதிகள் பெரிதும் குறையும் நிலை ஏற்பட்டுள்ளது.

"சிறு பாசனம், மீன் வளம், மின்சாரம் போன்ற திட்டங்களில் நடப்பு ஆண்டில் செய்துள்ள முதலீடுகள் பெரிதும் உயர்த்தப்பட்டுள்ளனவென்றும், இதனால் நடப்பு ஆண்டின் திட்ட முதலீடு, வரவு--செலவுத் திட்டத்தில் நாம் வகை செய்திருந்த ரூ. 85.25 கோடிக்கு மாறாக, ரூ. 88.10 கோடி அளவிற்கு உயரும்.

"இந்த ஆண்டில் மத்திய அரசு அளிக்கும் உதவியை ரூ. 38 கோடியிலிருந்து ரூ. 43.50 கோடியாக உயர்த்த ஒப்புக்கொள்ளுமென்றும் நாம் எதிர்பார்த்தோம்; ஆனால் அந்த நம்பிக்கை ஈடேறவில்லை; எனவே, நமது நிதி வசதியின் துணைகொண்டே பெரியதொரு திட்டத்தைச் சரிக்கட்டவேண்டி வந்தது.

"அடுத்த ஆண்டில் சிறு பாசனத் திட்டங்களுக்குக் கடன் வழங்கல் பற்றிச் சில பெரிய கொள்கை முடிவுகளை நாம் எடுத்துள்ளோம். அரசு இப்போது முடிவு செய்துள்ள முறைப்படி கிணறுகள் தோண்டுவதற்கும், விசையேற்றங்கள் அமைப்பதற்கும் வழங்கப்படுகிற புதிய கடன்கள், சில நில அடமான வங்கிகளின் வாயிலாகவே கிடைக்கும். இதைப் போலவே, விரைவில் செவ்விய முறையில் செயல்படவிருக்கும் வேளாண்மைத் தொழிற்கழகம், விசையேற்றங்களையும், டிராக்டர்களையும் தவணைக் கொள்முதல் அடிப்படையில் வழங்குவதற்கும் பொறுப்பேற்கும்.

"தவணைக் கொள்முதல் அடிப்படையில் விசையேற்றங்களை வழங்குவதற்காகக் குறைந்த அளவு ரூ. 100 இலட்சமும், டிராக்டர்கள் வழங்குவதற்காக ரூ. 70 இலட்சமும் ஒதுக்க இயலுமென்று கருதுகின்றோம். அதேநேரத்தில், நடப்பு ஆண்டிலும், இதற்கு முந்திய ஆண்டுகளிலும் முதல் தவணைத் தொகை வழங்கப்பட்டுள்ள கிணறுகளுக்கான இரண்டாவதும் அதற்கு மேற்பட்ட கடன் தவணைத் தொகைகளையும் வழங்குவதற்கென—உதவித் தொகை நீங்கலாக—ரூ. 250 இலட்சம் அரசு வகை செய்துள்ளது.

"எனவே, நில அடமான வங்கிகளின் மூலமாகவும், வேளாண்மைத் தொழிற்கழகத்தின் வாயிலாகவும் கிட்டும்படிச் செய்துள்ள உதவித் தொகை உட்பட உழவர்களுக்குக் கிடைக்கும் உதவித் தொகை எந்த வகையிலும் குன்றாது—குறையாது! அதற்கு மாறாக, சிறு பாசனத் திட்டங்களுக்கென உழவர் பெருமக்களுக்குக் கிடைக்கும் கடன் உதவி கணிசமான அளவிற்கு உயரும்.

"நில அடமான வங்கிகளின் வாயிலாகச் செயல்படவிருக்கிற இயல்பான இத்திட்டங்களைத் தவிர, ஒரே தொகுப்பாக உள்ள பகுதிகளில்—குறிப்பாகப் பெரிய பாசனத் திட்டங்களிலிருந்து பாசன வசதி பெறும் பகுதிகளில்—ஒரு போக நிலங்களைப் பெரும் அளவில் இரு போக நிலங்களாக மாற்றுவதற்கு வசதியாயிருக்கும் பொருட்டு, சிறு பாசன வசதிகளை முனைந்து பெருக்குவதற்கான சில திட்டங்களையும் அரசு வரைந்துள்ளது. இத்திட்டங்கள், வேளாண்மை மறுகடன் உதவிக் கழகத்திடமிருந்து சிறப்பு உதவி பெற்று நிறைவேற்றப்படும்.

"புதுக்கோட்டைப் பகுதியில் மொத்தம் ரூ. 92.5 இலட்சம் முதலீடு செய்து 2,000 கிணறுகளைத் தோண்டுவதற்கும் 500 விசையேற்றங்களை நிறுவுவதற்குமான ஒரு திட்டத்திற்கு வேளாண்மை மறுகடன் உதவிக் கழகம் ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது; இத்திட்டத்தின் பகுதியாக, அடுத்த ஆண்டில் ரூ. 22.5 இலட்சம் செலவில் 500 கிணறுகள் தோண்டும் பணியும், 100 விசையேற்றங்கள் அமைக்கும் பணியும் நிறைவேற்ற இயலும்.

"இவ்வாறே, கோவை மாவட்டத்தில் தொண்டாமுத்தூர், பெரியநாயக்கன்பாளையம் பகுதிகளில் மொத்தம் ரூ. 168 இலட்சம் செலவில் 1,000 கிணறுகள் தோண்டுவதற்கும் 1,000 விசையேற்றங்கள் நிறுவுவதற்கும் வகை செய்துள்ள ஒரு திட்டத்திற்கு ஏற்கனவே வேளாண்மை மறுகடன் உதவிக் கழகம் அனுமதி வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்திற்கிணங்க அடுத்த ஆண்டில் ரூ. 42 இலட்சம் செலவில் 250 கிணறுகள் தோண்டும் பணியையும் 250 விசையேற்றங்கள் நிறுவும் பணியையும் செய்து முடிக்கக் கருதுகிறோம்.

"இந்தத் திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதிகளை மத்திய நில அடமான வங்கி, சிறப்பு வளர்ச்சி ஈட்டுறுதி ஆவணங்களை வெளியிட்டுத் திரட்டும். இந்த ஆவணங்களில், வேளாண்மை மறுகடன் உதவிக் கழகம் 75 சதவிகிதத்திற்கும், மாநில அரசு எஞ்சிய 25 சதவீதத்திற்கும் முதலீடு செய்யும்"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், உழவுத் தொழில் துறையினருக்கு உறுதிமொழி வழங்கியிருக்கிறார்கள். தமிழக அரசின் வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றத்தில் அளித்து அண்ணா அவர்கள் நிகழ்த்திய உரையில், வேளாண்மைத் துறை மேம்பாட்டுக்கென அரசு வகுத்துள்ள திட்டங்களையும், எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் விளக்கியிருப்பதாவது :—

மிகு பயன்தரும் தானிய ரகத் திட்டங்களிலும், ஒரு போக நிலங்களை இரு போக நிலங்களாக மாற்றும் திட்டங்களிலும் நாம் வேண்டிய அளவிற்கு வெற்றிபெற்றிருப்பதைக் கருதி, வேளாண்மை உற்பத்தி வேலைத் திட்டங்களுக்கும், அதனோடு இணைந்த வேலைத் திட்டங்களுக்கும் தொடர்ந்து நமது திட்டத்தில் சிறப்பளித்துவந்துள்ளோம்.

உணவுத் தானிய உற்பத்தியில் ஏற்பட்டுள்ள உயர்வு, நல்ல பருவநிலை காரணமாக மட்டும் ஏற்பட்ட உயர்வு அல்ல என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

புள்ளிவிவரங்களைப் பாகுபடுத்திப் பார்த்ததிலிருந்து, நமது மாநிலம் முழுவதிலும் தென் மேற்குப் பருவ மழையினால், முந்திய ஆண்டில் 416 மில்லிமீட்டர் மழையும், 1965—66-ல் 315 மில்லிமீட்டர் மழையும் பெய்ததற்கு மாறாக, இவ்வாண்டு சராசரி 289 மில்லிமீட்டர் மழையே பெய்துள்ளது எனத் தெரியவருகிறது.

1965—66-ம் ஆண்டில், நமது மாநிலத்தில் என்றுமே கண்டிராத அளவில் வறட்சி நிலை ஏற்பட்டது என்று பொதுவாகக் கருதப்படுவதை நினைவுறுத்த விரும்புகின்றேன்.

நடப்புப் பசலி ஆண்டில் பெய்த மழையின் அளவு, இதற்கு முந்திய ஆண்டுகளின் அளவைக் காட்டிலும் மிகக் குறைந்திருந்தது; இக்குறைவு, 1966—67-ம் ஆண்டோடு ஒப்பிடும்போது, 30.5 சதவிகிதமும், 1965—66-ம் ஆண்டோடு ஒப்பிடும்போது 8.2 சதவீதமுமாக இருந்தது.

இங்ஙனமே, வடகிழக்குப் பருவ மழையும் பொய்த்துவிட்டது. 1966—67-ல் 606 மில்லிமீட்டர் மழை பெய்திருக்க, 1967—68-ல் சராசரி 496 மில்லிமீட்டர் அளவிற்கே மழை பெய்துள்ளது. இதனால் ஏற்பட்ட குறைவு, 18.1 சதவிகிதமாகும்.

இவ்விரு மழைக் காலங்களையும் இணைத்துப் பார்த்தோமேயானால், நடப்பு ஆண்டின் மழை அளவு, 1966—67-ம் ஆண்டின் மழை அளவைக் காட்டிலும் 23.1 சதவிகிதம் குறைந்துள்ளது தெரியவரும்.

இந்த இரண்டு பருவங்களிலும் ஆங்காங்கு பெய்த மழை அளவை மேலும் கூர்ந்து ஆய்வு செய்வோமானால், பருவ மழை மேலும் பாதகமாயிருந்திருப்பதை அறியலாம்.

1966—67-ல் 48 நாட்களும், 1965—66-ல் 41 நாட்களும் மழை பெய்திருக்க, நடப்பு வேளாண்மை ஆண்டில் மொத்தம் 39 நாட்கள் மட்டுமே மழை பொழிந்துள்ளது.

வடகிழக்குப் பருவ மழையும், பயிர் வளரும் காலமும் இணைந்து செல்லும் இந்தக் கால அளவில், 1966—67-ல் 24 நாட்களும் 1965—66-ல் 22 நாட்களும் மழை பெய்திருக்க, நடப்பு வேளாண்மை ஆண்டில் 18 நாட்கள் மட்டுமே மழை பொழிந்துள்ளது.

எனவே, பயிர்கள் வளரும் முக்கிய தருவாயில் பெய்த மழை அளவு, பெரும் அளவிற்குப் பற்றாக்குறையாகவே இருந்தது.

பெரிய பாசன நீர்த்தேக்கங்களின் நீர் மட்டமும், நெஞ்சம் மகிழும் அளவிலே அவ்வளவு நிறைவு அளிப்பதாக இல்லை.

இத்தகைய இடையூறான பருவ நிலைகள் வாய்த்தபோதிலும், நடப்பு ஆண்டில் உணவுத் தானிய உற்பத்தி, 1966—67-ம் ஆண்டின் உற்பத்திக்கு மேல் 2-இலட்சம் டன் உயர்ந்து, ஏறக்குறைய 60 இலட்சம் டன் அளவில் நிற்கு மென்பது நமக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய செய்தியாகும்.

நடப்பு ஆண்டில் பொதுவாக, '1965—66-க்கு நேர்' என்று சொல்லத்தக்க பருவநிலை அமைந்துள்ளது. அவ்வாறு 1965—66-உடன் ஒப்பிட்டு நோக்கின், நடப்பு ஆண்டின் உற்பத்தி 7.4 இலட்சம் டன் உயர்ந்திருக்கிறது.

இந்த உற்பத்தி உயர்வு, நடப்பு ஆண்டில் அரசு மேற்கொண்டுள்ள குறிப்பான திட்டங்களின் வாயிலாகக் கிட்டியுள்ள பலன்களை, முற்ற எடுத்துக் காட்டுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

இவ்வாண்டில் மிகு பயன்தரும் தானிய ரகத் திட்டத்தின்கீழ் கிடைத்துள்ள பலன்களினால் ஊக்கமடைந்து, அத்திட்டத்தில், நெல் விளைச்சலின்கீழ் நடப்பு ஆண்டில் இருந்த 13 இலட்சம் ஏக்கர் பரப்பளவை, அடுத்த ஆண்டில் 25 இலட்சம் ஏக்கர் அளவுக்கு உயர்த்த அரசு கருதுகிறது.

இதைப் போலவே, இத்திட்டத்தின்கீழ், கலப்பினச் சிறு தானிய விளைச்சலின் கீழுள்ள நிலப் பரப்பும், நடப்பு ஆண்டில் ஏறக்குறைய 1 இலட்சம் ஏக்ராவிலிருந்து, அடுத்த ஆண்டில் 1.7 இலட்சம் ஏக்கராவுக்கு உயர்த்தப்படும்.

மிகு பயன்தரும் தானிய ரகத் திட்டங்களின் வெற்றி, உர வகைகளை அதிகமாய்ப் பயன்படுத்துவதையே பெரிதும் பொறுத்துள்ளது.

நடப்பு ஆண்டில் உர வகைகள் வழங்கப்படும் நீர்மையிலிருந்து, அடுத்த ஆண்டு உர வகைகள் கிட்டும் நிலை எளிதாகுமென்று தெரிகிறது. இதற்கிணங்க உர வகைகளைப் பயன்படுத்துவதை, நடப்பாண்டில் ஏறக்குறைய 1 இலட்சம் டன் 'நைட்ரஜன்' அளவிலிருந்து அடுத்த ஆண்டில் பெரும் அளவுக்கு உயர்த்தத் திட்டமிட்டிருக்கின்றோம். பருவ நிலை பொய்க்காது—மிகு பயன்தரும் தானிய ரகங்களை மேலும் அதிகப் பரப்பளவில் பயன்படுத்திப் போதிய அளவில் உரமிட்டோமானால், அடுத்த ஆண்டில் உணவுத் தானிய உற்பத்தி பெரும் அளவிற்குப் பெருகும்.

சிறுபாசனத் திட்டங்களும் நிறுவன நிதி உவியும்

மிகு பயன்தரும் தானிய வகைத் திட்டமும், பாசன வசதிகளைப் பெருக்கும் திட்டமும் ஒன்றோடொன்று இணைந்து செயல்பட வேண்டுமென்றும், குறிப்பாக ஒரு போக நன்செய் நிலங்களை இருபோக நன்செய் நிலங்களாக மாற்றுவதற்கு நாம் முனைந்து செயல்பட வேண்டுமென்றும் அரசும் உணருகிறது. இதற்காக, இறைவைப் பாசனத்திற்குரிய வசதிகளை விரிவுபடுத்த வேண்டியிருக்கும் இந்த நிலையில், கிணறுகள்—துளைக் கிணறுகள்—வடிமுனைக் குழாய்க் கிணறுகள் இவற்றைத் தோண்டும் திட்டங்களும், விசையேற்றங்களை நிறுவும் திட்டங்களும் சிறப்பான இடம் பெறுகின்றன.

வேளாண்மை மறு கடன் உதவிக் கழகத்திடமிருந்து பின்வரும் வேலைகளுக்காக உதவி பெறுவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன :—

1. கோவை மாவட்டத்தில், அமராவதி நீர்த் தேக்கத் திட்டப் பகுதியில் ரூ. 160 இலட்சம் செலவில் 2,000 கிணறுகளைத் தோண்டுதல் — 2,000 விசையேற்றங்களை நிறுவுதல்;
2. இராமநாதபுர மாவட்டத்தில், பெரியாறு விரிவுப் பகுதியில் ரூ 45 இலட்சம் செலவில் 900 கிணறுகளைத் தோண்டுதல்—900 விசையேற்றங்களை நிறுவுதல்;
3. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் புதிய கட்டளைக் கால்வாய், புள்ளம்பாடிக் கால்வாய்ப் பகுதிகளில் ரூ. 165 இலட்சம் செலவில் 2,650 கிணறுகளைத் தோண்டுதல்—4,000 விசையேற்றங்களை நிறுவுதல்;
4. மதுரை, மேலூர் வட்டங்களில் ரூ. 100 இலட்சம் செலவில் 2,000 கிணறுகளைத் தோண்டுதல்—2,000 விசையேற்றங்களை நிறுவுதல்;
5. தருமபுரி மாவட்டத்தில்—கிருஷ்ணகிரி வட்டத்தில் ரூ. 100 இலட்சம் செலவில், 2,000 கிணறுகள் தோண்டுதல்—2,000 விசையேற்றங்களை நிறுவுதல்.

நடுத்தரப் பாசனத் திட்டங்கள்

நமது மாநிலத்தில் இன்னும் வாய்ப்புள்ள சில நடுத்தரப் பாசனத் திட்டங்களையும் மிக விரைவாக நிறைவேற்றி வருகின்றோம்.

1968—69-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், இவ்வேலைத் திட்டங்களுக்காக 3 கோடியே 58 இலட்ச ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது.

நில அடிமட்ட நீர்வள ஆய்வு

நமது மாநிலத்தில் புதிய – பெரிய பாசனத் திட்டங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்பு மிகக் குறைவாகும்.

'மேற்கொள்ளுவதற்கு ஏற்ற திட்டங்கள்' என்று கருதப்படு

(2-ம் பக்கம் பார்க்க)

மற்றப் பகுதிகளுக்கும் படி அரிசி....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நிறைவு செய்வதற்கே 1968-ம் ஆண்டில் நாம் 10 இலட்சம் டன்கள் கொள்முதல் செய்ய வேண்டியிருக்கும். இந்த 10 இலட்சம் டன்களுக்கும் அதிகமாக நாம் எவ்வளவு கொள்முதல் செய்கின்றோமோ அந்த அளவுக்கும், விளைச்சல் கணிசமாகப் பெருகி தானிய சேமிப்பு நிலைமை திருப்திகரமாக்கும் அளவுக்கும்தான், இத்திட்டத்தை மற்றப் பகுதிகளுக்கு விரிவுபடுத்துவது பற்றி நாம் ஆலோசிக்க முடியும்.

ரூபாய்க்குப் படி அரிசித் திட்டத்தை எவ்வளவு விரைவில் மற்றப் பகுதிகளுக்கு விரிவுபடுத்த முடியுமோ அவ்வளவு விரைவில் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் உறுதி கொண்டுள்ளது.

தானியச் சேமிப்பு நிலையை உறுதிப்படுத்திக்கொண்டு வெகு விரைவிலேயே மற்றப் பகுதிகளுக்கு இத்திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என்பது அரசாங்கத்தின் உறுதியான கொள்கை என்பதை இந்த அவைக்கு நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.

சர்க்கரை

1966 ஏப்ரல் மாதம் முதற்கொண்டு 1967 மார்ச் வரை மத்திய அரசு தமிழகத்திற்கு மாதம் 16,100 டன்கள் சர்க்கரை ஒதுக்கி வந்தது; 1967 மார்ச்—ஏப்ரல் மாதங்களில் இந்த ஒதுக்கீடு 11,500 டன்களாகக் குறைக்கப்பட்டது; 1967 மே மாதம் முதற்கொண்டு நவம்பர் வரையில் இந்த அளவு மேலும் குறைக்கப்பட்டு 9,600 டன்கள் ஒதுக்கப்பட்டது.

சர்க்கரை விநியோகத்தில் முன்பிருந்த கட்டுப்பாடுகளை ஒரு பகுதி யளவில் நீக்கிப் புதிய கொள்கை ஒன்றை மத்திய அரசு 1967 நவம்பர் மாதம் 23-ம் தேதி முதற்கொண்டு அமலில் கொண்டு வந்தது. இப்புதிய முறையின்படி 1967-68 பருவ காலத்தில் சர்க்கரை ஆலைகள் உற்பத்தி செய்யும் சர்க்கரையில் 60 சதவிகிதம் 'லெவி' முறையின்கீழ் கொள்முதல் செய்யப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட லெவி விலைக்குத் தனிப்பட்டவர்களுக்கு விற்கப்படும். எஞ்சிய 40 சதவிகிதம் சர்க்கரையை, சர்க்கரை ஆலைகள் இந்தியாவில் எங்கு வேண்டுமென்றாலும், எந்த விலைக்கும் விற்றுக்கொள்ளலாம்.

இவ்வாறு ஒரு பகுதியளவில் மட்டும் கட்டுப்பாடுகளை நீக்கும் மத்திய அரசின் கொள்கை, 'இரண்டுங்கெட்டான்' கொள்கை என்று மத்திய அரசுக்கு நாம் எடுத்துச் சொன்னோம்; ஆயினும் மத்திய அரசு, தங்களுடைய கொள்கையை முடிவு செய்துவிட்டதால் அந்த முடிவை நாமும் அனுசரித்துச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்தப் புதிய முறையின்படி லெவி திட்டத்தின்கீழ் மாதம் சுமார் 6,000 டன் சர்க்கரை தமிழகத்திற்கு ஒதுக்கப்படுகிறது. தமிழகத்தில் சர்க்கரை ஆலைகள் மாதம் சுமார் 2,750 டன்கள் அளவில் சர்க்கரையை வெளிச் சந்தையில் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளன.

'லெவி' சர்க்கரை தனிப்பட்டவர்களுக்குக் கிலோ கிராம் ரூ. 2.75-க்கு விற்கப்படுகிறது. மத்திய அரசின் திட்டத்தின்படி வெளிச் சந்தை சர்க்கரையை, ஆலைகள் எங்கு வேண்டுமென்றாலும்—தமிழகத்திற்கு வெளியில்கூட—எந்த விலைக்கும் விற்றுக்கொள்ளலாம்.

ஆனால் வெளிச் சந்தை சர்க்கரை முழுவதும் தமிழகத்திற்குள்ளேயே புழங்க வேண்டுமென்றும், நியாயமான விலைக்குக் கிடைக்க வேண்டுமென்றும் நம் மாநில அரசு கருதியதால், இம்மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களுடன் ஒரு ஏற்பாட்டிற்கு வந்தது.

இந்த ஏற்பாட்டின்படி, சர்க்கரை ஆலைகள் வெளிச் சந்தை சர்க்கரை முழுவதையும், அரசாங்கத்திற்கோ, அரசாங்கம் குறிப்பிடும் நபர்களுக்கோ, குவிண்டாலுக்கு ரூ. 350-க்கு விற்கும். மொத்தமாகக் கொள்வினை செய்வோருக்குக் குவிண்டால் ரூ. 350 அளவில்—அதாவது, கிலோ கிராம் 3.65 விலையில் இது விநியோகிக்கப்படுகிறது.

மொத்த விற்பனை செய்வோரின் தேவைகள் இந்த வெளிச்சந்தை சர்க்கரையிலிருந்து கிடைப்பதால், லெவி முறையின்கீழ் கிடைக்கும் சர்க்கரை தனிப்பட்டவர்களின் தேவையை நிறைவு செய்யப் பயன்படுகிறது.

தமிழகத்தில், தமிழக அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகளின் பலனாக வெளிச்சந்தை சர்க்கரையும், நியாயமான—நிலையான—விலைக்குக் கிடைக்க வழி பிறந்துள்ளது.

வெளிச்சந்தை சர்க்கரை முழுவதும் வேறு இடங்களுக்குச் சென்றுவிடாமல் நம் மாநிலத்திலேயே கிடைப்பதற்கும், நியாயமான விலைக்கு விற்கப்படுவதற்கும், தமிழக அரசு துணிவுடனும், தீவிர முயற்சியுடனும், செய்த ஏற்பாட்டின் பலனாக வழி பிறந்துள்ளது.

இந்த ஏற்பாடு, முதலில் மூன்று மாத காலத்திற்கு செய்யப்பட்டது; 1968 பிப்ரவரி மாதம் இந்த ஏற்பாடு முடிய இருந்தது; ஆலை உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதன் பலனாக மேலும் மூன்று மாத காலத்திற்கு நீடிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசினால் நம் மாநிலத்திற்கு மிகக் குறைவான அளவு சர்க்கரை ஒதுக்கப்படும் சூழ்நிலையிலே, இருப்பதை வைத்துக்கொண்டு ஓரளவு நிலைமையைச் சரிக்கட்ட மாநில அரசு தன்னால் இயன்றதனைத்தும் செய்து வருகின்றதை இந்த அவை பாராட்டுமென்று நம்புகிறேன்.

பயறு, பருப்புவகைகள்

பருப்பு வகைகளைப் பொறுத்த வரையில், சென்ற ஆண்டு நம் நிலைமை மிகவும் நெருக்கடியாக இருந்தது. சென்ற ஆண்டில், பருப்பு உற்பத்தி செய்யும் உபரி மாநிலங்கள், மற்ற மாநிலங்களுக்குப் பருப்பை எடுத்துச் செல்வதன்மீது கட்டுப்பாடுகள் விதித்தன. உபரி மாநிலங்களிடமிருந்து வாங்கி மற்ற மாநிலங்களுக்கு அரசாங்கப் பொறுப்பிலேயே பருப்பு வகைகளை வழங்கும் பொறுப்பை மத்திய அரசு ஏற்றுக்கொண்டது.

நம் மாநிலத்திற்கு அதிகமான பருப்பு வகைகள் வழங்க வேண்டுமென்று நாம் மத்திய அரசிடம் வற்புறுத்தி வந்துள்ளோம். இல்லாவிடில் உபரி மாநிலங்களிலிருந்து மற்ற மாநிலங்களுக்கு இப்பருப்பு வகைகள் ஏற்றுமதியாவதை தடுத்து விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை நீக்க வேண்டுமென்று வற்புறுத்தி வந்தோம்; இவ்விரண்டு கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

ஆயினும், இந்த ஆண்டு பருப்பு வகைகளின் விளைச்சல் கணிசமாகப் பெருகியுள்ளதால், தமிழகச் சந்தைகளிலே இவற்றின் விலை இறங்குமுகமாயுள்ளது.

இப்பருப்பு வகைகளுக்காக மற்ற மாநிலங்களையே நம்பியிருக்கும் நிலையை மாற்றி, நாமே தன்னிறைவு நிலையை எய்தும் பொருட்டு, நம் மாநிலத்தில் பயறு—பருப்பு வகைகளின் உற்பத்தியைப் பெருக்க அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

திரைப் படக் கலையைவிட நுண்கலை!

சென்னை, மார்ச் 7—

" திரைப்பட அரங்குகளின் உரிமையாளர்கள் கேளிக்கை வரி; கொடுக்காமல் ஏய்ப்பதற்காகக் கையாளும் முறைகள், திரைப் படக் கலையைவிடச் சிறந்த நுண்கலையாக உள்ளன "

என்று அமைச்சர் கே. ஏ. மதியழகன், சட்டமன்றக் கேள்வி நேரத்தில் கூறினார்.

கருநாடகத்தில் கழகம் வளருகிறது

ஊராட்சித்தேர்தலில் தி.மு.க.தோழர்கள் வெற்றி

சென்னை, மார்ச் 3—

கருநாடக மாநிலத்தைச் சேர்ந்த தேவர் ஜீவன ஹள்ளி ஊராட்சிக்கு நடைபெற்ற தேர்தலில், முதல் தொகுதியில் (ஏ. கே. காலனி) கழகச் சார்பில் போட்டியிட்ட தோழர் கண்ணன், கழக ஆதரவுடன் போட்டியிட்ட கோவிந்தசாமி ஆகிய இருவரும் வெற்றிபெற்றனர்.

பெலியன் நகர்த் தொகுதியில் போட்டியிட்ட கழக வேட்பாளர் அனைவரும் மகத்தான வெற்றிபெற்றனர். வெற்றிபெற்றோர்:—

1. பழம்நீ
2. மாரி (அன்புமணி)
3. காத்தவராயன்
3. கோதண்டம்

இந்தத் தேர்தல் முடிவுகள் நேற்று காலை அறிவிக்கப்பட்டன.

பத்திரிகை நிருபர்கட்கு இலவச பஸ் பயணம்?

சென்னை, மார்ச் 7—

" அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளில் பத்திரிகை நிருபர்கட்கு இலவசப் பயணம் செய்யும் சலுகை வழங்கப் படுமா ?"

என்று சட்டமன்றத்தில் ஓர் உறுப்பினர் கேட்ட கேள்விக்கு, 'போதிய நிதி வசதிகள் ஏற்படும்போது இப்படிப்பட்ட நல்ல காரியங்களையெல்லாம் செய்யலாம்' என்று பதிலளித்தார்—பொதுப்பணி அமைச்சர் மு. கருணாநிதி.

கட்டாயக் கருத்தடை

மாநில அரசின் கருத்துக் கேட்கப்படவில்லை

சென்னை, மார்ச் 7—

"பெருகிவரும் மக்கட் தொகையை மட்டுப்படுத்தக் கட்டாயக் கருத்தடை செய்வது விரும்பத்தக்கதா என்பது குறித்து இம்மாநில அரசை, மத்திய அரசு கலந்தாலோசிக்கவில்லை "

என்று, சுகாதார அமைச்சர் சாதிக்பாட்சா, சட்டமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளித்தார்.

சிதம்பரம், மார்ச் 5—

சிதம்பரம் நகர் மண்வேட்டி பக்கிரி சந்தின் கீழ்புரம் குடிசைகள் நிறைந்த பகுதியில் இன்று பகலில் தீவிபத்து ஏற்பட்டது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

9—3—68

கடையநல்லூர்

நகர தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு மறுமலர்ச்சித் திடலில்; தலைவர்: மு.பெ. முகையதீன் பிள்ளை; பேசுவோர்: சனார்த்தனம் பி.எஸ்சி., ஆ. திராவிடமணி, ப. புகழேந்தி, அ. இராமநாதன், சி. நடராசன், சம்சுதீன்.

கோவை

7-வது வட்ட எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு சௌடம்மன் கோயில் திடலில்; தலைவர்: கே.எம். சின்னையன்; பேசுவோர்: சி.வி. ஆடலழகன், எஸ்.ஏ.இராசமாணிக்கம் எம்.சி., மு. இராமநாதன், க. மருதாசலம், கேரள சுந்தரம், மற்றும் பலர்.

சத்தியமங்கலம்

வடக்குப்பேட்டை அண்ணா மன்ற முதலாவது ஆண்டு நிறைவு விழா; மாலை 7 மணிக்கு சந்தைப்பேட்டையில்) கழக உயர் நிலைப்பள்ளி எதிரில்); தலைவர்: இளங்கோவன்; பேசுவோர்: பெரியார் ஈ.வெ.ரா., எஸ்.ஜி. கண்ணப்பா, என்.கே.சுப்பிரமணியம்.

10—3—68

மதுரை

31-வது வட்டார தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு பழைய குறவர்பாளையம் சாலையில்; தலைவர்: கா.வெ. சரவணன்; பேசுவோர்: கே.ஆர்.பி. மணிமொழியன், கு. திருப்பதி, கே.எஸ். சந்தானம் எம்.சி., எஸ். காமராசர் எம்.சி., மற்றும்.

கோவை

7-வது வட்டார தி.மு.க.—எஸ்.எஸ்.ஆர். மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு தண்டுமாரியம்மன் கோயில் பின்புறத்தில்; தலைவர்: டி.டி. வேலு; பேசுவோர்: திருச்சி சௌந்தரராசன்; சி.வி. ஆடலழகன், எஸ்.ஏ. இராசமாணிக்கம் எம்.சி., கேரளசுந்தரம், க. மருதாசலம், அ. வெங்கிடபதி, கு. திரவியம், ஏ.ஆர். இராமச்சந்திரன்.

ஈரோடு

வட்ட தி.மு.க. செயலாளர் க. அன்பரசு அவர்களுக்கு மோட்டார் சைக்கிள் அளிக்கும் விழாக் குழுச் சார்பில் மாலை 6 மணிக்கு குன்னத்தூர் சந்தைத் திடலில்; தலைவர்: வி.வி. இராமு; பேசுவோர்: மு சின்னசாமி எம்.எல்.ஏ., மற்றும் பலர்.

* * *

நகர் தி.மு.க. கிளைச் சார்பில் மாலை 7 மணிக்கு 21-வது வார்டு கே.வி.கே. சாமி திடலில்; தலைவர்: நா. நடேசன்; பேசுவோர்: ஜி.என். இராசு, திருமதி டாக்டர் சேதுபாஸ்கரன், மா. சுப்பிரமணியம் பி.ஏ., பி.எல்., ஈ. ஏ. மதார்சா, ப.ச. விசுவநாதன், செ. அரங்கராசன் எம்.சி., ச. அர்ச்சுனன், எஸ். அப்பாவு.

புதுவை வட்ட தி.மு.க. கிளைக் கழகச் செயலாளர்கட்கு:

"31—12—67 வரை புதுவை நகரப் பகுதியில் உள்ள பதிவு பெற்ற உறுப்பினர்கள், உரிமைச் சீட்டு வரப் பெற்றுள்ள கிளைக் கழகங்கள், தற்கால அமைப்பு ஏற்படுத்தியுள்ள கிளைக் கழகச் செயலாளர்கள்—பிரதிநிதிகள் ஆகியோர், தங்கள் பதிவு எண்களுடன் 17—3—68-க்குள் கீழ்க்கண்ட எனது முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் "

என்று வட்டச் செயலாளர் அறிவிக்கிறார்.

முகவரி:—எம். ஏ. சண்முகம், திருப்பணம்பாக்கம், குருவிநத்தம் அ. நி., பாகூர் வழி.

குழுக் கூட்டங்கள்

மதுரை 31-வது வட்டாரம்

"10—3—68 காலை 10-மணியளவில், மதுரை 31-வது வட்டார எம். ஜி. ஆர். மன்ற உறுப்பினர் கூட்டம், பழைய குயவர்பாளையம் மகாலிங்கம் சேர்வை சந்து ஆரம்பப் பள்ளியில் நடைபெறும்" என்று செயலாளர் மு. செல்வராசு அறிவிக்கிறார்.

மாதுங்கா—பம்பாய்

"10—3—68 மாலை 6-மணிக்கு பம்பாய்—மாதுங்கா தி. மு. க. செயற்குழுக் கூட்டம், 'கிங் சர்க்கிள் கார்டன்' அருகில் நடைபெறும்" என்று செயலாளர் பொ. அப்பாதுரை அறிவிக்கிறார்.

முசிறி மாவட்ட தி.மா.மு.க. அமைப்புக் கூட்டம்

"முசிறி மாவட்ட தி. மா. மு. க. அமைப்புக் கூட்டம், 10—3—68 காலை 10-மணியளவில் துறையூர் தேவி நாடக சபாவில், திருச்சி மாவட்டப் பொறுப்பாளர் எம்.எஸ். வெங்கடாசலம் எம்.ஏ.பி.எல் முன்னிலையில் நடைபெறும்" என்று அமைப்பாளர் கோ. இராசு அறிவிக்கிறார்.

சி. பி. சிற்றரசு

எம்.எல்.சி. சுற்றுப்பயணம்

மார்ச் 10: தென்காசி; 11: செங்கோட்டை; 12: சுந்தரபாண்டியபுரம்; 13: தேனி; 14: போடிநாயக்கனூர்; 15: நாகர்கோயில்; 16: பெரியகுளம்; 17: திண்டுக்கல்; 18: பாரைப்பட்டி; 20: எலாவூர்; 23: சென்னை 74-வது வட்டம்; 24: வேலூர்; 25: கிருஷ்ணகிரி.

கா. காளிமுத்து நிகழ்ச்சிகள்

மார்ச் 10: வேடசந்தூர்; 18: நாகப்பட்டினம்; 19: அரியலூர்; 24: சிவகாசி.

ஏப். 3: நெய்வேலி; 5: ஈரோடு; 7: ஊட்டி; 9, 10, 11: சென்னை; 13, 14: பெங்களூர்; 15: வரட்னப்பள்ளி.

மணிவண்ணன்—பத்மினி

குழுவினர் கலை நிகழ்ச்சிகள்

மார்ச் 9: அப்புப்பட்டு; 13: சுருளூர்; 15: காட்டுப்புதூர்; 20: திருச்சி; 23: நிரவி; 25: வேலம்புதுக்குடி.

முகவரி:— மணிவண்ணன் 12/16, கிருட்டினசாமி கோயில் தெரு, தேனாம்பேட்டை, சென்னை-18.

கைத்தறிப் பொருட்காட்சி

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கச் சார்பில், சென்னை—எழும்பூர் பாந்தியன் சாலையில் நடைபெறும் பொருட்காட்சியில் 9—3—68 மாலை 6-மணிக்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி அவர்கள் தலைமையில், தமிழ் வளர்ச்சித் துறை நெறியாளர் மு. ரா. பெருமாள் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்; இரவு 7-மணிக்கு 'மாவிளக்கு' என்ற நாடகம் நடைபெறும்.

திருமணம்

10—3—68 காலை 9-மணியளவில் சட்டமன்ற உறுப்பினர் கே. ஆர். கோவிந்தன் பி.ஏ.பி.எல்.—செல்வி: அறிவுக்கொடி திருமணம் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் குன்னமுடையானூரில் நடைபெறும்; அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், ஏ. கோவிந்தசாமி, சத்தியவாணிமுத்து, மா. முத்துசாமி, மற்றும் என். வி. நடராசன் எம்.எல்.சி., பி. ஆர். நல்லதம்பி, ஜி. பி. சோமசுந்தரம் எம்.பி., கே. இராசாராம் எம்.பி., ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ. ஆகியோரும், மற்றும் சட்டமன்ற—நாடாளுமன்ற உறுப்பினர்களும், கழக முன்னணியினரும் வாழ்த்துரை வழங்குவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகின் அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.